## முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.

## OS.No -81 /2019

Date: 01.07.2025 PW. 1 (அம்பிகா )

(இந்த சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு அனுமதியுடன் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறது.)

**பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை:**

எனது தகப்பனார் பெயர் சுப்பையா. என் அப்பாவுடன் 3 ஆண்மக்கள், 3 பெண் மக்கள். மேற்கண்ட ஆண்வாரிசுகள் என்பது முத்தையா, சின்னக்காளை, சுப்பையா பெண்வாரிசுகள் என்பது பொன்னம்மாள், வெள்ளையம்மாள், மீனாள்(எ) மீனாட்சி ஆகியோர்கள் ஆவார்கள். மேற்கண்ட வெள்ளையம்மாள் வாரிசின்றி காலமாகிவிட்டார். மேற்கண்ட மீனாள்(எ) மீனாட்சி உயிரோடு இருக்கிறாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்கண்ட முத்தையா, சின்னக்காளை, பொன்னம்மாள் ஆகியோர்கள் காலமாகிவிட்டார்கள். மேற்படியாரின் வாரிசுகள் உள்ளார்கள். எனது தகப்னார் சுப்பையாவிற்கும் அவரது சகோதரர்களுக்கும் இடையே பதிவு பத்திரம் மூலம் 1976-ம் வருடம் பாகப்பிரிவினை நடைபெற்றதா என்றால் நான் அப்போது தான் பிறந்தேன். அது பற்றி தெரியாது.

பிரதிவாதி தாவா வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்துப்பார்த்தேன். மேற்கண்ட எதிர்வழக்குரைக்கு பிறகு பிரதிவாதி குறிப்பிட்ட 2 சொத்துக்களை நான் தாவா வழக்கில் சேர்த்துள்ளேன். என் தாயார் வள்ளி(எ) வள்ளியம்மை 2013-ம் வருடம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பதிவு செட்டில்மெண்ட் பற்றிய விவரம் தாவா வழக்கிற்கு 2 மாதங்களுக்கு முன்பு தான் தெரியவந்தது. மேற்கண்ட செட்டில்மெண்ட் பற்றிய விவரம் 2013-லேயே எனக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா 2வது செடியூல் 1வது இலக்க சொத்தானது எனது தாயாரால் பதிவு

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.07.01 17:24:28 +0530

கிடையமாக பெறப்பட்டது என்று சொன்னால் சரிதான். ஆனால், என் தகப்பனாரின் வருமானத்தில் மேற்படி சொத்து வாங்கப்பட்டது. மேற்கண்ட சொத்தையும் எனது தாயார் பிரதிவாதிக்கு பதிவு செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் எழுதிக்கொடுத்துவிட்டார். என் அப்பாவின் வருமானத்திலிருந்து எனது தாயார் பெயரில் சொத்துக்கள் வாங்கிய விவரமானது என் தாயார் சொல்லி தெரியும். எனக்கு நேரடியாக தெரியாது. 2003-ல் நடைபெற்ற பிரதிவாதியின் திருமணத்தில் நான் கலந்துகொண்டேனா என்றால் கலந்துகொண்டேன்.

மேற்கண்ட திருமணத்திற்கு பிறகு தான் 2-வது செடியூலில் கண்ட 2, 3 இலக்க சொத்துக்களை பிரதிவாதி அவரது பெயரில் பதிவு கிரையம் பெற்றார் என்றால் சரிதான். தாவா செட்டியூல் 3 மற்றும் 4 இலக்க சொத்துக்கள் என் தந்தையாரின் ஓய்வூதிய வருமானத்திலிருந்து கிரையம் வாங்கப்பட்ட விவரமானது எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். என் தாயார் பெயரிலுள்ள சொத்துக்களானது பூர்வீக சொத்துக்களின் மூலம் வந்த நெல் வருமானத்திலிருந்து வாங்கப்பட்டது. தாவா சொத்துக்களில் உள்ள 2 காட்டு சொத்துக்களிலிருந்து நிலக்கடலை வருமானம் வந்தது. அதை வைத்து பிரதிவாதி பெயரில் சொத்துக்கள் வாங்கப்பட்டது. பூர்வீக சொத்துக்களின் மூலம் வந்த நெல் வருமானத்திலிருந்து என் தாயார் பெயரில் சொத்துக்கள் வாங்கப்பட்டது என்பது குறித்தும், தாவா சொத்துக்களில் உள்ள 2 காட்டு சொத்துக்களின் மூலம் வந்த நிலக்கடலை வருமானத்தை வைத்து பிரதிவாதி பெயரில் சொத்துக்கள் வாங்கப்பட்டது என்பது குறித்தும், என்னுடைய பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ நான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.07.01 17:24:33 +0530

எங்கள் அம்மாவின் பெயரிலுள்ள சில சொத்துக்கள் பொறுத்து பிரதிவாதி அருட்செல்வம்  பெயரில் பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் என் அம்மாவால் பதிவு செய்து கொடுக்கப்படடது என்றும், அதன் மூலம் உரிமை மாற்றம் செய்யப்பட்டு, பட்டா மாற்றமும் பிரதிவாதி அருட்செல்வம் பெயரில் செய்யப்பட்டது என்பது குறித்தும் எனக்கு தெரியுமா என்றால் இருக்கலாம். என் சகோதரர் பிரதிவாதி அருட்செல்வம் திருச்சி சமயபுரத்தில் சுமார் 15 வருடத்திற்கு மேலாக வட்டி கடை நடத்தி வருகிறார் என்றால் சரிதான். அதன் மூலம் பிரதிவாதி அருட்செல்வத்திற்கு நல்ல வருமானம் வருகிறது என்றால் சரிதான். தாவா 4-வது செடியூலில் உள்ள அடிமனையில் பிரதிவாதி தான் அவரது சொந்த பணத்தில் 2009-ல் ஒரு தார்சு வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். அந்த தார்சு வீடு தரை தளம் மற்றும் முதல் தளம் கொண்டது என்றால் சரிதான். அந்த தார்சு வீட்டிற்கான வரியை பிரதிவாதி தான் சமயபுரம் பேரூராட்சியில் செலுத்தி வருகிறார் என்றால் சரிதான்.

நானும் எனது அண்ணன் பிரதிவாதியும் எத்தனை வருடங்காள பேசிக்கொள்வதில்லை என்றால் 2012-ம் வருடத்திலிருந்து ஒரு மனஸ்தாபத்திலிருந்து பேசிக்கொள்வதில்லை. 2010-ம் வருடம் பிரதிவாதி தான் என் பிள்ளைகளை திருச்சியில் உள்ள மேரிஸ் பள்ளியில் சேர்த்தார் என்றால் சரிதான். 2010-ம் வருடம் சமயபுரத்திற்கு அருகிலுள்ள புரத்தாக்குடியில் என் சகேதாரான பிரதிவாதி அறிமுகம் செய்த வகையில் ஸ்ரீ.தனலெட்சுமி பேங்கர்ஸ் என்ற அடகுகடையை நாங்கள் வைத்தோம் என்றால் சரிதான். திருச்சியில் உள்ள கோகுலம் Sheet fund-ல் சீட்டு சேருவதற்காக பிரதிவாதி எங்களுக்காக ஜாமீன் கையெழுத்து போட்டார் என்றால் சரிதான். மேற்கண்ட ஸ்ரீ.தனலெட்சுமி பேங்கர்ஸ்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.07.01 17:24:40 +0530

உள்ள பகுதியில் எனது அண்ணன் பிரதிவாதியும் வந்து கடை வைத்ததால் எனக்கும் பிரதிவாதிக்கும் பிரச்சனை ஏற்பட்டு அது சம்மந்தமாக காவல்நிலையம் வரை சென்று பிரச்சனை ஆனது என்றால் சரிதான். மேற்கண்ட எங்கள் வட்டி கடைக்கு அருகில் பிரதிவாதி 2019-ம் வருடம் தான் வந்து வட்டி கடை வைத்தார் என்றால் சரிதான். என் கணவர் பிரதிவாதியை தாக்கயிதால் சமயபுரம் காவல்துறையில் என் அண்ணன் பிரதிவாதி புகார் கொடுத்தார் என்றால் சரிதான்.

எங்கள் தாயார் 2016-ம் வருடம் காலமானார். என் அம்மாவின் இறுதி சடங்கிற்கு நான் செல்லவில்லை என்றால் சரிதான். என் அம்மாவின் இறப்பை எங்களுக்கு தெரிவிக்கவில்லை. என் அம்மாவின் இறப்பு என் அண்ணன் மூலம் எனக்கு முறையாக தெரிவிக்கப்பட்டது என்றும், ஆனால் நான் தான் என் அம்மாவின் இறுதி சடங்கில் கலந்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்ள் அனைத்திலும் என் அண்ணனுடன் சேர்ந்து நானும் கூட்டாக அனுபவித்து வருகிறேன் என காட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 முதல் 6 வரை உள்ள ஆவணங்கள் அனைத்திலும் என் அண்ணன் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். இங்கு காட்டப்படும் வா.சா.ஆ.7 பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தில் என் அப்பா வருமானத்தை கொண்டு என் அம்மா பெயரில் சொத்து வாங்கப்பட்டதாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். இங்கு காட்டப்படும் வா.சா.ஆ.8 பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தில் என் அப்பா வருமானத்தை கொண்டு என் அம்மா பெயரில் சொத்து வாங்கப்பட்டதாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.07.01 17:24:46 +0530

வா.சா.ஆ.9 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தை 2017-ம் வருடமே பிரதிவாதி சென்னையில் உள்ள கோகுலம் பைனான்சில் பதிவு அடமான பத்திரம் செய்திருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.என் அண்ணன் பிரதிவாதியின் பெயரிலுள்ள வா.சா.ஆ.12 ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட என் அப்பாவின் சகோதர சகோதரிகளையும் தற்போது வாரிசாக சேர்க்கவில்லை என்பதால் தகுந்த வாரிசுகளை சேர்க்காதாதல் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால்சாயல்ல. அதே போல் தாவா சொத்துக்களில் உள்ள கிரைய சொத்துக்கள் என் அண்ணன் வருமானத்தில் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்பதால் அது குறித்து பரிகாரம் கோர எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் பூர்வீக சொத்துக்களிலிருந்து எந்த வருமானமும் வரவில்லை என்றும், அதிலிருந்து எந்த சொத்தக்களும் என் அம்மா மற்றும் அண்ணன் பெயரில் வாங்கப்படவில்லை என்றும், பூர்வீக சொத்துக்களிலிருந்து வந்த வருமானத்தை வைத்து தான் என் அம்மா மற்றும் என் அண்ணன் பெயரில் சொத்துக்கள் வாங்கப்பட்டதாக நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லியபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, கையொப்பமிடப்பட்டுள்ளது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.07.01 17:24:52 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**சிவகங்கை.**